# விடியல்

THE DAWN மாத இதழ்

பொழுது - 93
ஜனவரி 2017



## தை மாத சிறப்பிதழ்





SUN Printer தி.கோடு. 97500 20222



KSR COLLEGE OF ARTS AND SCIENCE
INDIA
Knowledge is Power

விடியல் மாத இதழ் (தனிச்சுற்றுக்கு மட்டும்)
வெளியீடு: தமிழ்த்துறை
கே.எஸ். ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
திருச்செங்கோடு - 637 215, தமிழ்நாடு, இந்தியா.


*fb* : facebook.com/ksrcasthamizh.vidiyal
*Blog* : *ksrcasthamizh.blogspot.in*
*Email* : *vidiyalmagazhine@gmail.com*
*Website* : *ksrcas.edu*


விடியல்
JANUARY 2017

# விடியல்

The Dawn

இதழ்-93 , ஜனவரி-2017



**கௌரவ ஆசிரியர்**

**முனைவர் வே. இராதாகிருஷ்ணன்**

கல்லூரி முதல்வர்

**ஆசிரியர்**

**முனைவர் சி.ரா. சுரேஷ்**

துறைத்தலைவர்

**இணையாசிரியர்**

**திரு. செ. தங்கராஜ்**

**ஆசிரியர் குழு**

திரு .வீரா. முருகானந்தம்
முனைவர் த. கண்ணன்
திருமதி. சு. சாந்தி
திரு. ப. ராஜேஷ்
முனைவர் து. சரஸ்வதி
முனைவர் பா. ராஜேஷ்
முனைவர் கோ. இரவிச்சந்திரன்
முனைவர் ம. லோகேஷ்வரன்
திரு. மு. சதீஸ்குமார்
முனைவர் சு. முப்பிடாதி
முனைவர் ப. பிரதீபா
திரு. மு. சத்தியராஜ்
முனைவர் ப. சிலம்பரசன்
திரு. ந. சரவணன்


## தலையங்கம்

## வென்று காட்டிய மாணவர் படை

ஏட்டுக் கல்வியை மட்டும் கற்றறிபவர்கள் மாணவர்கள் அல்ல. காலம் காலமாக மாணவர்களுக்கு படிப்பின் மீது எந்தளவிற்கு அக்கறை இருக்கின்றதோ அதே அளவிற்கு சமுதாயத்தின் மீதும் அக்கறை இருந்துள்ளது மீண்டும் ஒருமுறை நிருபனம் ஆகியிருக்கின்றது. இந்தி எதிர்ப்பு உட்பட இதுவரை நம்நாட்டில் நடைபெற்ற பெரும் புரட்சியில் மாணவர்களின் பங்கு அளப்பரியது. அதே நிலை தான் 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலும் நடந்தேறியுள்ளது.

தமிழர்களின் பண்டைய கால பழக்க வழக்க, பண்பாட்டின் அடையாளமாகத் திகழ்வது, சல்லிக்கட்டு என்றழைக்கப்படும் ஏறுதழுவுதல் நிகழ்ச்சியாகும். தமிழர்களின் கருவூலமாகத் திகழும் சங்க இலக்கியம் ஏறுதழுவுதல் என்னும் நிகழ்ச்சியைப் பற்றி உரைக்கின்றது.


© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)

வெளியீடு:

**தமிழ்த்துறை**

**கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி**(தன்னாட்சி)

**திருச்செங்கோடு - 637 215. தமிழ்நாடு, இந்தியா.**

**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal **Website:** ksrcas.edu

**Blog:** ksrcasthamizh.blogspot.in **E-mail:** vidiyalmagazhine@gmail.com

KSR COLLEGE OF ARTS AND SCIENCE INDIA Knowledge is Power



All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publish

"கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையிலும்
புல்லாலே ஆய மகள்"

அச்சம் தரக்கூடிய கொல்லும் தன்மையுடைய காளையைக் கண்டு அஞ்சுபவனை அடுத்த பிறவியிலும் ஆயமகள் திருமணம் செய்து கொள்ளமாட்டாள் என கலித்தொகையின் முல்லைக்கலிப் பாடலில் விளக்குகிறது. தமிழரின் வீரத்தினை நிலைநாட்டுவதில் ஏறுதழுவுதல் என்ற ஒரு நிகழ்வு இன்றியமையாததாக இருக்கின்றது. இந்நிகழ்வு அன்றைய காலம் தொட்டு பாரம்பரியமாகத் தொடர்ந்து கொண்டிருந்த நிலையில் 2008 ஆம் ஆண்டு முதல் சட்டச் சிக்கலுக்கு உள்ளானது. ஒருசில அமைப்புகள் ஏறுதழுவுதலை நடத்துவதற்கு எதிராக உச்சநீதிமன்றம் மூலம் தடையாணை பெற்றது.

இதனைத் தொடர்ந்து தமிழகத்தின் ஆட்சி அதிகாரத்தைக் கையில் வைத்திருந்த அரசுகள் நடுவண் அரசுக்கு கடிதம் எழுதுவதோடு மட்டுமே நின்றுவிட்டது. நடுவண் அரசும் சல்லிக்கட்டுத் தடையை நீக்க கடின முயற்சியை எடுக்காத நிலையில் 2017 சனவரியில் மாணவர்கள் சென்னை மெரினாவில் கூடிப் போராடத்தொடங்கினர். அதனைத் தொடர்ந்து இப்போராட்டம் தமிழகமெங்கும் மாணவர் போராட்டமாக உருப்பெற்றது.

சுமார் ஒருவாரகாலம் நடைபெற்ற இப்போராட்டத்தினைக் கண்டு தமிழக அரசு அவசரச்சட்டம் கொண்டு வர நடுவண் அரசும் ஓரிரு நாளில் ஒப்புதல் அளித்தது. சல்லிக்கட்டுக்கான தடை நிரந்தரமாக நீக்கப்பட்டுள்ளது. இப்போரட்டம் வெற்றிபெறக் காரணம் மாணவர்களே. இனிவரும் பிரச்சனைகளிலும் மாணவர் போராட்டம் தொடருமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

**இணையாசிரியர்**

# உள்ளுறை

கவிதைகள்........................................... 04 - 20

பொதுவானவைகள்............................ 21 - 26

விடுகதைகள்...................................... 26 - 28

மருத்துவக் குறிப்புகள்.................... 28 - 31

சிறுகதை............................................ 32 - 32

# கவிதைகள்

## கிழிசல்

காலம் போடுகின்ற
கோலம்
கந்தையில் விழுகின்ற
கிழிசல்

உலகம் சுற்றிய
புண்ணியம்
காகிதப் பணத்தின்
கிழிசல்

எதிர்பாராத தோல்வி
நம்பிக்கையில்
விழுகின்ற கிழிசல்

தாங்க முடியாத
அவமானம்
தன்மானத்தில் விழுகின்ற
கிழிசல்

நடத்துநரின்
சமயோசித்தம்
பயணச் சீட்டின்
கிழிசல்

வாழ்க்கையையே

இழக்கும் ஏழை
இறைவன் படைப்பின்
கிழிசல்

புு. கமலக்கண்ணன்
தமிழிலக்கியம் - மூன்றாமாண்டு

## உழவின் முக்கியத்துவம்

வேளாண்மை
புராதனத் தொழில் - இன்று
புறக்கணிக்கப்பட்ட தொழில்...

காய்ந்து வெடித்த
வயல் வெளிகளும் - அதனால்
அழுது அழுது
ஓய்ந்து துடித்த
கயல் விழிகளுமாய்

முப்போகம் விளைந்த பூமி இனி
எப்போது விளையும் என்ற
ஏக்கப் பெருமூச்சாய்
உழவனின் வாழ்க்கை...!

வேளாண்மை செய்பவனை
மேலாண்மை செய்பவன்
மிதிக்கிறான்.
மேலாண்மை செய்பவனை
வேளாண்மை செய்பவன்

துதிக்கிறான்.

பழிக்கப்பட்டவரிடம்
சோகத்தைச் சொல்லி அழுவதை
வழக்கமாய்க் கொண்டவர் நாம்...!

பாவம் உழவன்
மண்ணோடு பாதி நாள்
மாடுகளோடு மீதி நாள்
சோகத்தை யாரிடமாவது
சொல்லி அழலாமென்றால்
ஒட்டுவதில்லை...

உழுது முடித்த சனம்
அழுது முடிக்கும் முன்னே
பொழுது முடிந்துவிடும்
நாளை என்ற நம்பிக்கையில்
நாளைத் தள்ளும் நாடகமே
நடைமுறை...!

வேரோடு வேராக
வளரும் பயிருக்குள்
ஒன்றிவிடும் உழவர்கள்...

வயிறு ஒட்டி
சோகம் அப்பி
தேகம் மெலிந்த
இவர்கள் தான் - இந்த
தேசத்தின் வேர்களாம்...?

நீர்வீழ்ச்சியை இரசிக்கலாம்

வேருக்கு வீழ்ச்சியென்றால்
எப்படியடா ரசிப்பது...

கார் இல்லையென்றால்
கால்கள் இருக்கின்றன
விமானம் இல்லையென்றால்
அவமானம் இல்லை...
தானியம் இல்லையென்றால்
சூனியம் தானடா...!

இருந்தாலும் இங்கே
கழனிகள் எல்லாம்
மதிப்பிழந்தாச்சு;
கணினிகள் மட்டும்
மதிப்பு பெற்றாச்சு...

குறுக்கு வலிக்க
உழைத்தக் கூட்டம்
குடிசையை விட்டு உயரவில்லை;
குறுக்கு வழியில்
பிழைத்தக் கூட்டம்
கோடிகள் சேர்க்க அயரவில்லை...

பெற்ற சம்பளம் போதவில்லை
என்பதோடு மட்டுமே
நின்று போனது
கற்றறிந்தோர் போராட்டம்...

விவசாயக் கூலிகளின்
வேதனைப் பற்றியும்

விவசாயிகளின் வேதனை பற்றியும்
அவரவர் அன்றி
வேறு எவரும்
கவலை கொள்ளார்...

கலப்பைகள் கூடக்
கவலை கொள்ளும் - இவர்
களைப்பறியா உழைப்பைக் கண்டு...!

கள்ளிச் செடியும்
கலவரம் கொள்ளும் - அந்தக்
காய்ந்த நிலப்பரப்பைக்
காண நேர்ந்தால்

அதிலும்
நம்பிக்கை விதைத்து
கனிகள் விளைவித்து
உயிர் வாழ்வை
உறுதி செய்தோரின்
உயிர் வாழ்க்கை
உத்திரவாதமின்றி
ஊசலாட்டத்தில்...

கலப்பை மாறி 'டிரக்டர்' ஆச்சு
கமலை மாறி 'மோட்டார்' ஆச்சு
விதைகள் மாறி 'வீரியம்' ஆச்சு
விவசாயிகள் வாழ்க்கை மட்டும்
வீழ்ந்திடல் ஆச்சு

விளைபொருள் கூட

கூர்த் தீட்டிய
கொலைக் கருவியாய்
விவசாய இறக்குமதியில் இன்று
இத்தனை சோகமும்
பார்த்த பின்னும்
காலம் மறந்து
கண்மூடி வாழ்ந்து
மரித்த பின்
மண்மூடிப் போகவா
வாழ்க்கை...!

செ. சூர்யா
முதலாமாண்டு - கணினி பயன்பாட்டியல் துறை - ஆ பிரிவு

## தோழி

என் கண்ணில் கண்ணீர் வரும்போது
அவளது கைகளை கைக்குட்டைகளாக மாற்றி துடைத்தவள்..
நான் தடுக்கி விழுந்த போது
என்னைத் தாங்கிப் பிடித்தவள்
என் கவலையை அவளுடையதாக்கி
அவள் மகிழ்ச்சியை என்னுடையதாக்க நினைப்பவள்
எதிர்பார்ப்பு என்ற எண்ணம் இல்லாமல்
என்னுடன் இருக்கும் என்னவள்
என் நினைவுகளில் நீங்கா இடம்பிடித்து
நிலைத்து நிர்பவள்
என் தாய், தந்தை, குருவிற்கு அடுத்ததாக
என்னை சரியான பாதையில் சிந்திக்க வைப்பதும்

தவறான பாதையில் செல்வதைத் தடுத்து நிறுத்துவதும்

என் உயிர் போன்ற என் தோழியே...!

த. கிருபா

முதலாமாண்டு - கணினி அறிவியல் துறை - அ பிரிவு

## இனிது செய்வோம்...!

மழையைத்தான் எதிர்பார்த்தோம்
வர்தாவாய் வந்ததேனோ,
வன்சிரமம் தந்ததேனோ...?
வான்பொழிய உதவியதை,
நூற்றாண்டு கடந்ததை
வேரோடு சாய்த்ததேனோ...?
கண்ணிமைத்த நேரமதில்
கசக்கிப் போட்டாயே
எத்துனைபோர் வாழ்வை...!
புண்பட்டுப் பொலிவிழந்தனர்
எந்தன் உடன்பிறப்புகள்,
உந்தன் இரக்கமின்மையால்...!
இதுபோதும் இனிவேண்டாம்
ஒருபோதும் சினம் வேண்டாம்
அமைதியால்
இருந்துவிடு...!
மானிட சென்மமே வருடத் தொடக்கமிது,
வாருங்கள் திருந்திடுவோம்...!
இனியொரு கொடூர
'சுனாமியோ'

’வர்தாவோ’

நம்மையும் நம்

தலைமுறையையும்

விழுங்க விடாமல்...

அடுத்த சீற்றமதைத்

தடுக்க முயல்வோம்

இயற்கைக்கு இனிது செய்தே...!

கோ. யோகதர்ஷினி

முதலாமாண்டு - கணினி அறிவியல் துறை - அ பிரிவு

## அம்மாவுக்கொரு கடிதம்

உனக்கு வலி கொடுத்து பிறந்த

காரணத்தால் தானோ என்னவோ

எனக்கு வலி ஏற்படும் போதெல்லாம்

அழைக்கிறேன் உன்னையே ‘அம்மா அம்மா’ என்று...

நான் எத்தனை முறை உனக்கு

துன்பங்கள் கொடுத்தாலும் எனக்காக

எப்போதும் சந்தோசம் தருகின்றவள்

நீதனே ‘அம்மா’

என்னை நடக்க வைத்துப் பார்க்க

வேண்டும் என்ற ஆசையை விட

நான் விழிந்து விடக்கூடாது என்ற

கவனத்தில் தான் இருந்தது உன் ‘தாய்ப்பாசம்’

அம்மா நீ பல்லாண்டு காலம் வாழ்வாயாக...!

இ. அனீஸ் பாத்திமா

இரண்டாமாண்டு - இளங்கலைத் தமிழிலக்கியம்

# வானம் பார்த்த பூமி

விவசாயி வானத்தை
பார்த்தான் மழை பொழியவில்லை...!
விதைத்த விதையை
பார்த்தான் விதை விளையவில்லை...!
விவசாயி உணவை
தேடினான் உண்ணவே உணவில்லை...!
பூமி வானத்தை
பார்த்ததும் பூமி வறண்டது
நிலமெல்லாம் வறண்டது
ஏழை வயிறும் வறண்டது...!
மேட்டூரில் நந்தி தெரிந்தால்
குளத்தூரில் எங்கள்
வயிறு காயும்...!
விவசாயி வேர்வையை சிந்தி உழைக்கவில்லை
இரத்தத்தைச் சிந்தி உழைக்கிறான்...!
அவன் பூமியை அழிக்கவில்லை
தன்னைத்தானே அழித்துக் கொள்கிறான் இப்புவிக்காக...
அன்று விளைந்தது விவசாயம்
ஆனால் இன்று விளைவதோ இரசாயனம்...!
வாடுவது பயிரல்ல ஏழைகளின் வயிறு...!

ரா. பாலசுப்பரமனியம்
இரண்டாமாண்டு - இளங்கலைத் தமிழிலக்கியம்

# மழை

ஆழ்கடலில்

ஆவியாய்ப் புயலாய்!

விண்ணில் தவழும்

கார் மேகமாய்!

அடர்ந்த பசுமை நிறைந்த

அழகிய மரங்களின் குளிர் காற்றுமாய்!

இம்மண்ணிற்கு வருவாய்

உயிர் தாகமாய்!

இரவு பகல் உனக்கில்லை!

இறங்கி வா!

பூமிக்கு மழைநீராய்!

நீ சிரித்தால் பொழிவதோ

மழை நீராய்!

நாங்கள்

அழுதால் வடிவதோ

கண்ணீராய்!

எங்கள் பசியைப் போக்க

வருவாய்!

பூமியில் பசுமையை காக்கவும்

உயிர் தருவாய்!

நீ இல்லையேல்

நாங்கள் இல்லை தாயே!

என்றென்றும் உயிர்நீயே!

க. ரஞ்சூரியா

இளங்கலைத் தமிழிலக்கியம் - முதலாமாண்டு

ஆகாயத்தில் ஒளிவீசும் நிலவு தூங்குமா?

ஆழ்கடலின் கடல் நீர்தான் வற்றிப்போகுமா?

இளம் தென்றலை விலைகொடுத்து வாங்க முடியுமா?

இளம் தென்றல் தான்

உயர்வு தாழ்வென்று வீசப்போகுமா?

மழை நீர்தான் தூய்மையின்றி

மாறிப்போகுமா?

மழை நீர்தான் பயிர்மீது விழுந்தால் பயிர் வாடிப் போகுமா?

மழை நீர்தான் உயிர்நீர் தான் என்று

என்றென்றும் மறக்க முடியுமா?

மரம் வளர்ப்போம்! இயற்கையைக் காப்போம்!

மழை நீரை சேமிப்போம்!

க.ரஞ்சூர்யா

இளங்கலைத் தமிழிலக்கியம் - முதலாமாண்டு

# இயற்கை

மண்ணனையும் நீரையும் நண்பனாகக் கொண்டு

விதையை உயிராகக் கொண்டும்

செடிகளின் மேல் உள்ள பனித்துளிகளை

பன்னீர் துளியாகவும்

குடை போன்ற நிழலினைக் கொண்ட

மரங்களும்

அழகாகப் பூத்துக் குழுங்கும் மலர்வனச்

சோலைகள் எங்கும் மணம்வீசிக் கொண்டிருந்தன...

இலைகளுடன் இலைகள் சேர்ந்து

உரசும் சிரிப்பொலிகள்

இம்மரங்களின் இடையில் இனிய

ஓசையை எழுப்புகின்றன பறவைகள்...

கண்ணுக்குத் தெரியாத காற்றை

உணர வைக்கின்ற இயற்கையின் அழகு...

கெட்டதை உள்வாக்கிக் கொண்டு

மனிதனுக்கு சுவாசக்காற்றை வெளியிடும்

மரங்களே இயற்கையின் அம்சம்....

விதையை மண்ணில் விதைக்கிறோம்

அது மரமாக வளர்ந்து பூமித்தாயின்

மடியில் தவழ்கிறது இயற்கையாக...

மா.சாந்தி

மூன்றாமாண்டு - இளங்கலைத் தமிழிலக்கியம்

## சுதந்திரம்

சும்மா வரவில்லை

நம் சுதந்திரம்...

குருதி பாய்ந்தோட

உறுதி அவர்தம்

உள்ளத்தினில் உறைந்திருக்க

உதைபட்டு வாக்கிய சுதந்திரம்..

இன்று

உடைபட்டுப் போகுமா

இந்த

அரசியல் பாறைகளின் மீது மோதி

உறக்கிக் கொண்டிருக்கும்

இளைஞர்களின் இதய சிங்கம்

உயிர்த்தெழுவது எப்போது...?

இந்த அழகிய இந்தியத் திருநாட்டில்

இன்றே எழுந்து வா இளைஞனே...!

## அம்மா

என் முகம் பார்க்கும் முன்

என் குரல் கேட்கும் முன்

என் குணம் அறியும் முன்

நான் கருவில் இருக்கும் போதே

என்னை காதலித்த முதல் உயிர்

என் தாய்...!

எனது முதல் சிரிப்பையும்

என் முதல் அழுகையும்

ரசித்த முதல் ரசிகை

என் தாய்...!

வலியோடு கன்னை மூடி

என் கன்னைத் திறந்தால்

என் அன்பு அம்மா...

சி. சூர்யா

இளங்கலைத் தமிழிலக்கியம் - முதலாமாண்டு

## குழந்தை

மழலை அழகு கண்டு அழகிய நிலவும் வியந்து நிற்கிறது

மழலை சிரிக்கும் ஓசையைக்கேட்டு விண்மீன் எட்டிப் பார்க்கிறது

குழந்தை சுற்றி சுற்றி விளையாடும் அழகைக் கண்டு

சுழலும் பூமியே நின்று போகிறது

குழந்தைகள் காட்டும் பாசத்தின் முன்

வானத்தின் அளவு சிரியதாகிறது..

குழந்தைகள் அழுகையும் அழகு

சிரிப்பும் அழகு…

குறும்பும் அழகு, சிலிர்ப்பும் அழகு…!

அனைவரின் வீட்டையும்

மனத்தையும் அழகுபடுத்தும்

அழலிய வரம்தான் குழந்தைச் செல்வங்கள்…

சி. சூர்யா

இளங்கலைத் தமிழிலக்கியம் - முதலாமாண்டு

## கடந்த காலம்

குயிலின் ஓசை கேட்டு

குயிலாக நான் பாடிய

காலங்கள் நினைவில் வர!

மயிலின் ஆட்டம் பார்த்து

ஒயிலாக நான் ஆடிய

நாட்கள் நன்மை தர!

துன்பம் என்னும்

சுட்டெரிக்கும் வெயிலும்

இன்பம் என்னும்

மழை பொழிய

வெற்றிப் பாதையில்

இகழ்ச்சி என்னும்

முள் இருந்தாலும்

புகழ்ச்சி என்னும்

காலணி உதவ!

வாழ்க்கையில் இருள் சூழ்ந்தாலும்

இன்பமான விடியல் பிறக்க!

காலம் கடந்து கொண்டே

இருக்கும் நம் வாழ்வில்!

வாழ்க்கை என்னும் கடலில் நீந்த

கடந்து வந்த பாதை கடந்த காலம்

உயிருள்ளவரை

நம் நினைவில் வாழும்!

சி. சூர்யா

இளங்கலைத் தமிழிலக்கியம் - முதலாமாண்டு

# குடும்பத் தலைவி

பூக்களை காவல்காக்கும்
முள்வேலி அவள்..,
படையை நடத்திச் செல்லும்
தளபதி அவள்..,
ஓயாமல் உழைக்கும்
தொழிலாளி அவள்..,
கண்ணுறங்காத
கலங்கரை விளக்கு அவள்..,
ஊர் உறங்கும் வேளையில்
தானுறங்காமல் உறவுகளை
நினைத்துத் தவிப்பவளே..,
நெருப்பாய் எரித்துக் கொண்டிருந்த
கணவனின் உள்ளத்தை உதட்டு
வார்த்தைகளால் அன்புடன் பனியில்
குளிக்க வைத்தவளே..,
அவளே நல்ல மனைவி
ஒரு குடும்பத்தின் நல்ல தலைமை.

மு. இந்திரா
இளங்கலைத் தமிழிலக்கியம் - முதலாமாண்டு

# பொதுவானவைகள்

## தமிழ்

**அரிசியின் வேறு பெயர்கள்(சங்க இலக்கியத்தின் வழி)**

1.அடிசல்
2.அமலை
3.அமித்து
4.அயினி
5.அமி
6.அமிங்
7.அடுப்பு
8.உணா
9.உண்
10.கூழ்
11.சதி
12.சாதம்
13.சொன்றி
14.சோ
15.துப்பு
16.தோரி
17.பருக்கை
18.பாத்து
19.பிசி
20.புகர்வு
21.புழுங்கல்
22.புற்கை
23.பொருத
24.பொம்மல்
25.மடை
26.மிதவை
27.முரல்
28.வல்சி

நன்றி – தினத்தந்தி

தொகுப்பு
நா. சரண்யா
இளங்கலைத் தமிழிலக்கியம் - மூன்றாமாண்டு

# அழிந்து போன தமிழ் நூல்கள்

தமிழ் மன்னர்களுடைய ஆட்சி அழிந்தமையினாலும், ஆங்கில ஆட்சியினரின் அக்கறை குறைவினாலும், காலத்தால் பாழ்பட்டும், கடற்கோள்களின் அழிவிற்குள்ளாகியும், கறையான்களால் தின்னப்பட்டும் அவற்றுள் பல சுவடிகள் அழிந்து போயின. இவை அனைத்திற்கும் தப்பிச் சில நூல்கள் மட்டுமே எஞ்சியிருந்தன.

இவற்றையும் கூட, 'பழஞ்சுவடிகளை ஆடிப் பதினெட்டாம் பெருக்கில் ஆற்றில் விட்டால் புண்ணியம்' என்று ஒரு கொள்கை பரப்பப்பட்டதால் அந்தப் புண்ணியத்திற்காசைப்பட்டு மீதிருந்த பழஞ்சுவடிகளையும் சிலர் ஆற்றில் அள்ளிப் போட்டுவிட்டு அமைதி அடைந்தனர். இவ்வாறு அழிந்து போன மருத்துவ நூல்கள் பல :

1.அகத்தியர் பன்னிரு காண்டம்

2.போகர் எண்ணாயிரம்

3.கோரக்கர் மூலிகைப் பயன் - ஆயிரம்

4.கொங்கணவர் – மூவயிரத்து நூறு

5.கோரக்கர் வெண்பா – ஏழாயிரம்

6.மச்சமுனி – ஏழு காண்டம்

7.சிவவாக்கியம் - ஐந்து காண்டம்

8.காசிபர் வண்ணம்

9.உரோமமுனி வடுகம்

10.இராமதேவர் சந்தப்பா

11.நந்தீசர் சந்தம்

12.சக்குமாமுனி கலித்துறை

13.திருமூலர் திருமந்திரம் - எண்ணாயிரம்

14.பதஞ்சலி – ஏழு காண்டம்

15.சட்டமுனி – நிகண்டு

16.சட்டமுனி - இரண்டாயிரத்து எழுநூறு

17.காலங்கிநாதர் – நாலுகாண்டம்

18.போகர் – எழுநூறு

முதலியனவாகும்.

நா.சரண்யா

இளங்கலைத்தமிழிலக்கியம் - மூன்றாமாண்டு

## திருக்குறளின் பெருமை கேளீர்!

புத்தகம் நூறு புரட்டிக் களைப்புற்றுச்
சித்தம் கலங்கித் திகைப்தேன் - வித்தகன்
தெய்வப் புலவர் திருவள்ளுவர் சொன்ன
பொய்யில் மொழி இருக்கும் போது...
செந்தமிழ்ச் செல்வத் திருக்குறளை நெஞ்சமே
சிந்தனை செய்வாய் தினம்
நீதித்திருக்குறளை நெஞ்சாரத் தம் வாழ்வில்
ஓதித்தொழுது எழுக ஓர்ந்து.

-கவிமணி

பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் யல்லாத
மெய்ப்பால பெய்யாய் விளங்கினவே - முப்பாலின்
தெய்வத் திருவள்ளுவர்செய் திருக்குறளால்
வையத்து வாழ்வார் மனத்து

-தேனிக்கீரனார்

வள்ளுவரும் தம் குறள் பாவடியால் வையத்தார்
உள்ளுவதெல்லாம் அளந்தார் ஓர்ந்து

-பரணர்

உள்ளுவதோ றுள்ளுதோ றுள்ளும் உருக்குமே

வள்ளுவர் வாய்மொழி மாண்பு

-மாங்குடி மருதன்

திணையளவு போதாச் சிறுபுல் நீர் நீண்ட
பனையலவு காட்டும் படித்தால்

-கபிலர்

உப்பக்கம் நோக்கி உபகேசி தோள்மணந்தான்
உத்தர மாமதுரைக்கு அச்சென்ப - இப்பக்கம்
மாதானு பாங்கி மறுவில் புலச் செந்நாப்
போதார் புனற்கூடற்கு அச்சு

-நல்கூர்வேள்வியார்

நா. சரண்யா - இளங்கலைத் தமிழிலிலக்கியம் - மூன்றாமாண்டு

## சிந்தணை

அழகான விடியல் நேரம், பாரி மகளிரான அங்கவை, சங்கவை தனியிடத்திற்கு வருகை புரிந்தார் ஔவையார். அப்போது பாரி மகளிர் இருவரும் தன்னிடம் இருந்த சந்தேகத்தை ஔவையிடம் கேட்டனர். தாயே ‘தமியள் மூத்தற்று’ என்று திருவள்ளுவரின் திருக்குறளில் ஒரு தொடர் வந்துள்ளது. இக்குறளைப் படித்தால் பெண் திருமணம் ஆகாமல் இருந்தால் இழிவாகக் கருதுவதாக இருக்கிறதே. அதற்கு ஔவை கூறினால்; உண்மைதான் குழந்தாய்.

ஆண் ஒரு பாதியும் பெண் ஒரு பாதியும் இணையும் போதுதான் மனித வாழ்க்கை முழுமையாகிறது. அவன் என்பதும் அவள் என்பதும் இணைந்து அவரகள் ஆகும் போதுதான் முழுமையடைகின்றனர். ‘என்’ என்றும் ‘உன்’ என்றும் நினையாமல் ‘நம்’ என்று நினைக்கும் போதுதான் இல்லறம் சிறக்கிற்து என்று ஔவை கூறினாள்.

உடனே அங்கவை தாயே அப்படியென்றால்.... என்று கூற, நீங்கள் ஏன் திருமணம் செய்து கொள்ளவில்லை என்று தானே நினைக்கிறீர்கள்? என்று ஔவை கேட்க, அதற்கு இருவரும் ஆம்,ஆம் தாயே என்றார்கள்.

பின்பு ஔவை தன் வாழ்வு துறவானதுக்கு காரணம் கூறுகிறார் பாரி மகளிரிடம்...

நானும் இருவனைக் காதலித்தேன். உங்களின் கண்களில் வியப்புத் தோன்றத்தான் செய்யும். நானும் ஒரு காலத்தில் உங்களைப் போல் புத்தம் புது மலராகத் தான் இருந்தேன். ஒருநாள் பாப்புனைந்து மகிழ்ந்திருந்த காலத்தில் வீரன் ஒருவன் வந்தான். என் கற்பனையில் கவிதையில் காணப்படும் வீரனாவே இருந்தான்.

கையில் வேல்; காலில் புனைகழல்; மெய்யில் விழுப்புண்; பார்வையில் கொப்புளிக்கும் வீரம். இவன் என்னைப் பார்த்த போது கூட வீரமே முன் நின்றது. நான் தலைவியாக மாறினேன். அவன் என் ஆருயிர்த் தலைவனானான். என் தோழி வெள்ளிவீதியோ எங்கள் திருமணம் காண விழைந்தாள் அவளும் காதலில் விழிந்திருந்தாள்.

ஒருநாள் அரசன் என் தலைவனை அழைத்தான். போரில் தனக்கு துணை நிற்க வேண்டினான். தலைவன் சென்றான். மீளவில்லை. மழைத்துளியிலிருந்து காப்பாற்றும் குடையினைப் போல எம் தலைவன் மன்னனை நோக்கி வரும் வேற்படைகளைத் தாக்கி வீழ்ந்தவாறு மண்ணில் வீழ்ந்து வீர மரணம் எய்தினான். நடுகல் தெய்வமானான். நான் தனியாளானேன்.

தமிழ் இலக்கியத் தொண்டில் என் துன்பத்தை ஆற்றினேன். பெண்ணின் வாழ்நாளில் காதல் என்பது ஒரு முறை தான் மலரும்!

திருமணம் ஆகாமலே என் நெஞ்சில் நினைத்தவனை நினைத்து வாழ்ந்தேன். தமிழ்ப்பற்று ஊட்டினேன்.

ஆகவே, ஔவை தமிழ் இலக்கியத் தொண்டில் பணி செய்ய வந்ததுக்கு இதுவே காரணம்.

ம. நவீனா

இளங்லைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## விடுகதைகள்

1.அன்றாடம் மலரும் அனைவரையும் கவரும் அது என்ன?

- கோலம்

2.அரையடிப் புல்லில் ஏறுவான், இறங்குவான் அது யார்?

- பேன்

3.அரைச்சான் ராணி அவளுக்குள்ளே ஆயிரம் முத்துக்கள் அது என்ன?

- வெண்டைக்காய்

4.அலை அலையாய் ஆடிவரும் கடலும் அல்ல நிலையாக இருக்காது நிலவும் அல்ல அது என்ன?

- புகை

5.அம்பலத்தில் ஆடும் அழகுக் கண்ணனுக்கு அங்கம் முழுவதும் தங்கக் கண்ணாடி அது என்ன?

- மயில்

6.அர்த்த ராத்திரி ஆட்டம் அஞ்சாறு பேர் வந்தால் ஓட்டம் அது என்ன?

- மழை

7.அந்தரத்திலே பறக்கும் பறவையும் அல்ல அழகான வாலுண்டு குரக்கும் அல்ல அது என்ன?

➢பட்டம்

8.அதோ போகிறான் சிறுவன் அவன் போகும் தடம் தெரியாது அது என்ன?

➢எறும்பு

9.அதிசயக் குளத்திலே அற்புதக் கருவி ஒன்று வாலினால் தண்ணீரை வற்ற குடிக்குது அது என்ன?

➢விளக்கு

10.அத்தாயக் காட்டுக்குள்ளே ஐயர் குடை மடிக்கிறார் அது என்ன?

➢காளான்

பெ. நிவேதா

இளங்கலைத் தமிழிலக்கியம் - மூன்றாமாண்டு

1.ஆவணி பிறப்பது எதனால்? நாடகம் முடிவது எதனால்?

➢ஆடி முடிவதால்

2.அவனிடம் ஆயிரம் முடிச்சுகளும் உண்டு, ஆயிரம் ஓட்டைகளும் உண்டு, அவன் யார்?

➢கயிற்றுக் கட்டில்

3.அடி மலர்ந்து நுனி மலராத பூ எது?

➢வாழைப்பூ

4.அறைக்களோ அறுநூறு, அத்துனையும் ஒரே அளவு அது என்ன?

➢தேன் கூடு

5.இரத்தத்தில் வளர்வது இரத்தம் இல்லாதது?

➢நகம்

6.இருந்தாலும் இறந்தாலும் பறந்தாலும் இயற்கையில் இறக்கை மடக்காதது எது?

➢தட்டம் பூச்சி

7.இரட்டைக் கிளையில் ஒற்றை ஓணான் அது என்ன?

➢ரயில்

8.ஒரு நெல் குத்தி வீடெல்லாம் உமியாயிற்று? அதுவென்ன?

➢தீபம்

9.சின்னக் குழியில் செம்மறியாடு மேயிது, அதுவென்ன?

➢குழிப்பணியாரம்

10.அரிவான் மணப்பான் உற்சாகம் கொடுப்பான் அவன் யார்?

➢ஊதுவர்த்தி

வெ. தனுஸ்ரீ

இளங்கலைத்தமிழிலக்கியம் - இரண்டாமாண்டு

1.உலகில் சிறிய கடல் எது?

➢ஆர்டி கடல்

2.உலகிலேயே அதிகளவில் காபி விளையும் நாடு எது?

➢பிரேசில்

3.சீனாவின் தலைநகர் எது?

➢பீஜிங்

4.முதன் முதலில் பத்மஸ்ரீ விருதைப் பெற்றவர் யார்?

➢அன்னை தெரசா

5.கோள்களின் இயக்கத்தைக் கண்டுபிடித்தவர் யார்?

➢கெப்ளர்

மு. வைரமணி

இளங்கலைத் தமிழிலக்கியம் - முதலாமாண்டு

## மருத்துவக் குறிப்புகள்

### அருகம்புல்

❖ அருகம்புல்லை ஒரு கைப்பிடி அளவு எடுத்து நீர்விட்டு வடிகட்டி அதனுடன் பால், சர்க்கரை சேர்த்து குடித்து வர சிறுநீர்

சம்பந்தமான நோய்கள் நீங்கி சிறுநீர்ப்பை நோய்கள் நீங்கி பலப்படுத்தும்.

- தீராத வயிற்று வலிக்கு அருகம்புல்லுடன் வேப்பிலையை சம அளவு எடுத்து நீர் விட்டு காய்ச்சி வடிகட்டி 100 மி.லி அளவு குடித்து வர குணமாகும்.

- அருகம் புல் வேர் ஆவாரம் பூ இவை இரண்டையும் நிழலில் உலர்த்தி இடித்து சலித்து பொடியாக்கிக் கொள்ளவும். இதில் 2 கிராம் அளவு எடுத்து அத்துடன் நெய் கலந்து சாப்பிட மூல நோய் குணமாகும்.

- தலையில் உண்டாகும் பேன் பொடுகுத் தொல்லை நீங்கவும் குளிர்ச்சியாகவும் அருகம்புல் வேரை நிழலில் உலர்தி பொடியாக்கி நல்லெண்ணெயில் கலந்து காய்ச்சி தலையில் தேய்த்து குளித்து வர எல்லா வித தோல் நோய்களும் குணமாகும்.

கோ. கோகிலா

இளங்லைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## மருத்துவக் குறிப்புகள்

**காசநோய்:**

தினமும் நெல்லிக்காய் சாப்பிட்டு வந்தால் காசநோய் தீரும். பின்னர் பசுந்தயிர் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**நெஞ்சுவலி:**

தேங்காய் எண்ணெயில் கற்பூரம் சேர்த்து சுடவைத்து நெஞ்சில் தடவலாம். எலந்தைப்பழம் சாப்பிடலாம். இஞ்சித்துண்டு தேனில் ஊறவைத்து 48 நாட்கள் சாப்பிட்டு வரவும்.

**புற்றுநோய் வராமல் தடுக்க:**

முசுமுசுக்கை இலையைப் பொடியாக்கி மாதம் இரு முறை சாப்பிட்டு வரவும். நுரையீரல் சளி அடைப்புக்கு இஞ்சி, வெள்ளை எருக்கம் பூ, மிளகு சேர்த்துக் கசாயம் சாப்பிட்டு வரத் தீரும்.

**தலைவலி குணமாக:**

பிரண்டை எண்ணெய் தேய்க்கவும். வெற்றிலைக் காம்பு, லவங்கத்துடன் சம அளவு பால் கலந்து அரைத்துச் சூடாக்கி நெற்றிப்பொட்டில், உச்சந்தலையில் தடவ தலைவலி குணமாகும்.

ம. பிரீத்தி
இளங்லைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## நோய் தீர்க்கும் மூலிகைகள்

**துளசியின் மருத்துவப் பயன்கள்**

துளசிச் செடியின் இலைகளை நீரில் இட்டுக் கொதிக்க வைத்து ஆவி பிடித்தால் மார்புச்சளி, தலைவலி நீங்கும். துளசி விதைகளைப் பொடி செய்து ஒன்று அல்லது இரண்டு கிராம் அளவு உண்டால் உடல் சூடு நீரெரிச்சல் ஆகியன குணமாகும்.

**கீழாநெல்லி**

கீழாநெல்லி மஞ்சட்காமாலைக்குக் கைகண்ட மருந்தாகும். காய்களுடன் கூடியக் கீழநெல்லிச் செடியைத் தூயநீரில் கழுவிக் கொள்ள வேண்டும் பின்னர் அரைத்து விழுதாக்க வேண்டும்.

50 கிராம் அளவு 200 மி.லி எருமைத் தயிருடன் கலந்து காலை 6 மணியளவில் 3 நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வர மஞ்சட்காமலை நோய் தீரும்.

**தூதுவாளை**

தூதுவாளை இலைகளை நல்லெண்ணெய்யில் சமைத்து உணவோடு சேர்த்து 21 நாட்கள் உட்கொண்டால் சுவாசகம் என்னும் நோய் நீங்கும். இளைப்பு என்னும் இருமலைப் போக்கும். வாழ்நாளை நீடிக்கும்.

**குப்பைமேனி**

குப்பைமேனி நச்சுக்கடிக்கு நல்ல மருந்தாகும். இதன் இலையைப் பொடியாக்கிப் பூசினால் படுக்கைப் புண் குணமாகும். வயிறு தூய்மையாகும். பசியைத் தூண்டும். அரைத்துப் பூசினால் சொறி,சிரங்கு ஆகியன நீங்கும்.

**சோற்றுக் கற்றாழை**

சோற்றுக் கற்றாழையின் சோற்றுப் பகுதியை நல்லெண்ணெய்யுடன் சேர்த்துக் காய்ச்சி தலையில் தேய்த்து வந்தால் முடி வளரும். அதனுடன் மஞ்சள் சேர்த்துப் பூசினால் உடலில் உள்ள காயங்கள் ஆறும். பசும்பாலுடன் சேர்த்துச் சாப்பிட்டால் மூலச்சூடு குறையும்.

மு. மோகனப்பிரியா
இளங்லைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

**தினமும் நான்கு வேளை உணவு உண்பது உடலுக்கு நலம்**

**சிறுகதை**

## செல்வத்தால் உணர்ந்த கருத்து

ஒரு கிராமத்தில் ஒரு பிச்சைக்காரர் மாற்று உடையின்றி ஒரு சிறிய கோவனத்தை மட்டும் ஆடையாக அணிந்திருந்தார். அப்போது அங்கு வந்த செல்வந்தர் ஒருவர் இவரைக் கண்டு ஒரு தங்க காசினைத் தானமாகக் கொடுத்தார்.

அந்தக் காசினைக் கொண்டு பிச்சைக்காரர் ஒரு சிறிய பசுவை வாங்குகிறார். பின் அதில் பாலினைக் கரந்து அதை வியாபாரம் செய்து பணம் சேர்த்து செல்வந்தராக மாறுகிறார். பின்பு அவர் திருமனம் செய்து கொள்கிறார். மகனும் பிறக்கிறான்.


அவர் அவரது குடும்பத்துடன் சேர்ந்து வாழ்ந்து கொண்டிருந்தான். அவ்வாறான நிலையில் தன் மனைவி மக்களுக்காக பணம் சேர்த்து வைக்கும் குறிக்கோளுக்காக உழைக்க வேண்டிய நிலையில் இருந்தார். அப்போது அவரின் தேவைகள் அதிகரித்துக்கொண்டே சென்றது. பணத்தையும் சேர்த்து விட்டார். ஆனால் வாழ்வில் மட்டும் நிம்மதி கிடையாது. கடைசியில் நாம் ஏன் செல்வந்தனாக ஆனோம் என எண்ணி மனம் வருந்தினான்.

ஒருவரின் வாழ்க்கையில் செல்வம் ஒன்று வராதவரை தென்றல் காற்று வீசுயது. ஆனால் செல்வம் வந்தவுடன் தென்றல் காற்று புயல் காற்றாய் மாறிவிடுகிறது.

**குறிப்பு:**


**நாம் உண்ணும் உணவில் தின்மும் இரண்டு மூன்று வகைத் தானியங்கள் இருக்கும் படி பார்த்துக் கொள்ள வேண்டும்.**





விவசாயம்
by: F. SULAI MAAN
III - BA Tamil


ஜல்லிக்கட்டு - ஒரு தமிழனின் பண்பாடு
தமிழனின் வீரம்தான் ஜல்லிக்கட்டு
நம் தமிழகத்தின் வீர விளையாட்டு
By


B.Sc (Maths) - III - 'B'


R. SUPPURAJ
II - B.sc Physics 'B'


எனக்காக நீ அடி வாங்குறியே
தமிழா
by: F. SULAIMAAN
III B.A - TAMIL